## முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.18.12.2024

O.S.No. 266 / 2014

வா.சா.1 - சதாசிவம்

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) 1981 ம் ஆண்டு சொத்தில் கட்டிடம் கட்ட என் பாட்டி பெயரில் வரைபட அனுமதியும் திட்ட அனுமதியும் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். அந்த கட்டிடத்தின் பெயர் வசந்தா திருமண மண்டபம் என்று சொன்னால் சரிதான். என் பாட்டி 1ம் பிரதிவாதி பெயரில்தான் நகராட்சி சொத்து வரி, கரத்தீர்வை, திருமண மண்டப உரிமம், தொழில் வரி பெறப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா காலத்திலும் திருமண மண்டபத்தை 1ம் பிரதிவாதியும், 4 ம் பிரதிவாதியும் நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த கட்டிடங்கள் 1ம் பிரதிவாதியின் பாட்டியின் பராமரிப்பில் இருந்து வந்தது என்றால் சரியல்ல என் தாத்தாவின் பராமரிப்பில் இருந்து வந்தது. என் தாத்தாவின் காலத்திற்கு பின் எங்கள் பராமரிப்பில் இருந்து வந்தது. நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.4 இஷ்டதான பத்திரத்தை என் பாட்டியை எழுத வைத்தது என் தாத்தா என்றால் சரியல்ல. என் பாட்டி அந்த ஆவணத்தை உயில் ஆவணமாக எழுத வேண்டும் என சொன்னார் என்றாலும் என் தாத்தா அதை கேட்காமல் செட்டில்மெண்ட் ஆவணமாக எழுத செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. அவ்வாறு என் பாட்டி விருப்பதற்கு மாறாக செட்டில்மெண்ட் ஆவணமாக என் தாத்தா எழுத ஏற்பாடு செய்தது குறித்து என் பாட்டி என் தாயாரிடம் பலமுறை சொல்லி வருத்தப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் என்ற பெயரில் எழுதப்பட்டாலும் அது உயில் ஆவணம் தன்மையுடையது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 2009 ம் ஆண்டு எழுதப்பட்டது அதன் தேதி தெரியாது. என் தாத்தா இறந்த தேதி 4.12.2014, என் பாட்டி இறந்த தேதி 01.02.2018.

3) வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவண தேதி முதல் என் பாட்டி இறந்த தேதி வரை வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவண சரத்தை அனுசரித்து சொத்தின் ஸ்வாதீனம் என்னிடமும் என் தாயாரிடம் வழங்கப்படவில்லை என்றால் அனுபவத்தை நாங்கள்

எடுக்கவில்லை. வழக்குப்பட்டிகை சொத்தை வைத்து நாங்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றுள்ளோமா என்றால் இல்லை. கடன் பெற முயற்சித்தோம் என்றால் ஆம். சொத்து அனுபவம் அவர் வசம் இருப்பதாகவும் எவ்வாறு கடன்பெற முயற்சித்தோம் என என் பாட்டி என்னிடமும் என் தாயாரிடமும் கேட்டார் என்றால் சரியல்ல. என் தாத்தா இறக்கும் சமயம் அவருக்கு 87 வயது என்றால் சரிதான். என் தாத்தா இறப்பதற்கு முன்பு ஒரு திருமண நிகழ்விற்கு சென்ற சமயம் கேபிள் வயர் தடுக்கி கீழே விழுந்து அவரது விலா எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த விவரம் தெரிந்து என் தாத்தாவை நான்காம் பிரதிவாதிதான் முத்துக்குமார் மருத்துவமனையில் சேர்த்தார் என்றாலும் அங்கு என் தாத்தாவிற்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது என்றால் சரிதான்.

4) என் தாத்தா மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் சிகிச்சைக்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் தாத்தாவுடன் என் பாட்டியும் மருத்துவமனையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். என் தாத்தாவும் பாட்டியும் மருத்துவமனையில் இருப்பதை ஆதாயமாக பயன்படுத்தி 1ம் பிரதிவாதி வீட்டை உடைத்து வீட்டில் உள்ள பீரோவை உடைத்து அதில் இருந்த ஆவணங்கள் மற்றும் பாத்திரங்கள் மற்றும் நகைகளை நானும் என் தாயாரும் கைப்பற்றிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் அதற்கு முந்தைய ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை நாங்கள் அவ்வாறு வீட்டை உடைத்து கைப்பற்றியது என்றால் சரியல்ல. அதற்கு முன்பே ஆவணங்கள் எங்கள்வசம் தான் உள்ளது.

5) என் தாத்தா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது மருத்துவ செலவிற்கு என் பாட்டி கஷ்டப்பட்டார் என்றாலும் அதனை நான்காம் பிரதிவாதி செலவு செய்தார் என்றாலும் என் பாட்டி கஷ்டப்படவில்லை மருத்துவ செலவினை நான்காம் பிரதிவாதி செய்தார். அறுவை சிகிச்சை முடிந்து 8 நாட்கள் கழித்து என் தாத்தாவிற்கு இதயத்துடிப்பு சீராக இல்லை என என் தாத்தாவை 4ம் பிரதிவாதி வசந்தம் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான். சிகிச்சையில் இருந்த சமயம் என்

தாத்தா அந்த மருத்துவமனையில் வைத்து 4.12.2013 அன்று இறந்தார் என்றால் சரிதான். தாத்தாவிற்கான ஈமச்சடங்கு மற்றும் அதற்கான செலவுகளை நான்காம் பிரதிவாதி செய்தார் என்றால் சரிதான். நான் மற்றும் என் தாயார் என் பாட்டியுடன் இருந்து அவருக்கு ஆதரவு மற்றும் சமாதானம் செய்யவில்லை என்றால் மருத்துவமனையில் உடன் இருந்தோம். சடங்குகளில் கலந்துகொண்டோம். நான் சொல்வதுபோல் கலந்துகொள்ளவில்லை என்றாலும் தாத்தா இறந்த வீட்டிலேயே சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல. அந்த சமயத்தில் என் பாட்டி அவரையும் என் தாத்தாவையோ நானோ என் தாயாரும் கவனிக்கவில்லை என்றும் அவர்கள் மருத்துவமனையில் இருந்த சமயத்தில் அவர் பொருட்களையும் ஆவணங்களையும் எடுத்து சென்றுவிட்டோம் என வருத்தப்பட்டார் என்றால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

6) என் பாட்டி வாதிகளையும் பிரதிவாதிகளையும் மற்றும் அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் அழைத்து ஒரு பேச்சுவார்த்தை நடத்தினார் என்றால் அதுபோல் எதுவும் நடைபெறவில்லை. வழக்குச்சொத்து மொத்தம் 11 செண்ட். ஆவணப்படியும் கிடப்புப்படியும் 11 செண்ட். பத்திரப்படி 10.5 செண்ட் என்றால் சரியல்ல 11 செண்ட். என் பாட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 10.5 செண்ட் சொத்தை இரண்டு பங்காக பிரிக்க சொன்னார் என்றாலும் அதற்கு நாங்கள் சம்மதம் தெரிவித்தோம் என்றாலும் அதுபோல் எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை. எங்களுக்கு தெரியாமல் தான் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தார்கள். எங்கள் சம்மதத்துடன் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ரத்து ஆவணத்தின் மூலம் ரத்து செய்யப்பட்டது என்றால் எங்களுக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை எங்களை கலந்து ஆலோசிக்கவும் இல்லை. வா.சா.ஆ.5 ரத்து ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.5 ரத்து ஆவணத்தில் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்வதற்கு காரணமாக என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் என் அனுபவித்தில் உள்ளது என்றும் அவர் பராமரிப்பில் உள்ளது என்றும் அதனால் ரத்து செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

7) வா.சா.ஆ.5 ரத்து ஆவணம் எழுதப்பட்டபோது சொத்து வா.சா.ஆ.4 ஆவண சரத்துகளை அனுசரித்து என் பாட்டி கைவசம்தான் உள்ளது என்றால் அனுபவம்

மட்டும் என் பாட்டியிடம் இருந்தது பராமரிப்பு எங்கள் வசம் இருந்தது. நான் சொல்வதுபோல் அந்த சொத்தின் பராமரிப்பு எங்கள் வசம் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. நான் பராமரித்து வந்ததாக சொல்வதற்கு எந்த ஆவணம் எங்கள் கைவசம் உள்ளது என்றால் ஆவணங்கள் எங்களிடம் இல்லை. நான். வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்தேன். வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் எழுதி வைத்திருப்பது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2015 ம் ஆண்டு நவம்பர் மாதம் தெரிய வந்தது. அவ்வாறு தெரிய வந்த பின் என் பாட்டியிடம் ஏன் ரத்து செய்தீர்கள் என கேட்டோமா என்றால் கேட்கவில்லை. அந்த ரத்து ஆவணம் செல்லாது என்றோ எங்களை கட்டுப்படுத்தாது என்றோ என் பாட்டிக்கு வழக்கறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால் அனுப்பியதாக தெரியவில்லை.

8) 2009 முதல் 2014 வரை சொத்திற்கான கரத்தீர்வை அல்லது பட்டா என் பெயரிலோ என் தாயார் பெயரிலோ மாற்றியதாக ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பட்டா மற்றும் கரத்தீர்வை 2009 ம் ஆண்டு எங்கள் பெயரில் மாறிவிட்டது. 2009 முதல் 2014 வரை காலத்திற்கான பட்டா மற்றும் கரத்தீர்வை ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பட்டா கரத்தீர்வை எதுவும் 22.09.2014 வரை எங்கள் கையில் மாறவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வசந்தா திருமண மண்டப உரிமம் தற்போதும் பாட்டி பெயரில்தான் உள்ளது. அதனை ஆண்டுதோறும் புதுப்பித்துள்ளோம். 2014 ம் ஆண்டு வா.சா.ஆ.5 ரத்து பத்திரத்திற்கு பின் என் பாட்டி இறக்கும் காலம் வரை திருமண மண்ட உரிமத்தை நாங்கள்தான் புதுப்பித்தோம். என் பாட்டி அவர் பெயரிலான தொழில் வரி மற்றும் திருமண மண்டப உரிமத்தை ரத்து செய்ய கேட்டு நகராட்சிக்கு கடிதம் எழுதியிருந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை.

9) அதன் பின் என் பாட்டி உரிமத்தை புதுப்பிக்க மனு செய்ததாக அவர் பெயரில் நானும் என் தாயாரும் என் பாட்டியின் கையெழுத்தை மோசடியாக போட்டு உரிமத்தை புதுப்பித்து வந்தோம் என்றால் சரியல்ல. திருமண மண்டப விதிமுறைகள் எனக்கு தெரியும். தீயணைப்புத்துறை, சுகாதாரத்துறை, தொழில் உரிமம் பெற வேண்டும் என்றால் சரிதான். அவை அனைத்தும் என் பாட்டி பெயரில்தான் உள்ளது.

என் பாட்டி 2018 ம் ஆண்டு இறந்த பின்பு என் பாட்டியின் பெயரில் இதனால் வரை யார் உரிமத்தை புதுப்பித்து வருகிறார்கள் என்றால் நாங்கள்தான் அதற்கு மனு செய்து வருகிறோம். அதற்கு பாட்டியின் கையொப்பத்தை யார் போட்டுக்கொடுத்தார்கள் என்றால் என் பாட்டியின் கையொப்பம் தேவையில்லை என் அம்மாதான் அவர் பெயரில் மனு செய்து வருகிறார். 2018 ம் ஆண்டு முதல் என் அம்மா பெயரில் உரிமம் இல்லை. என் பாட்டியின் பெயரில் உள்ள உரிமத்தை மாற்ற முனிசிபல் அலுவலகத்தில் சம்மதிக்கவில்லை. உரிமம் புதுப்பிக்க என் அம்மா அவர் பெயரிலேயே அவர் கையொப்பம் போட்டுத்தான் என் பாட்டியின் பெயரில் உரிமம் புதுப்பித்து வருகிறார். இதுவரை என் அம்மா பெயரில் மண்டப உரிமம் மாறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து இருபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏ பட்டிகையுமாக பி பட்டிகையுமாக சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் ஏ பட்டிகை சொத்து இரண்டாம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) வா.சா.ஆ.6 ஆவணத்தில் ஏ பட்டிகையில் 4.031 செண்ட் மனையும் மற்றும் கட்டிடங்களும் மின் இணைப்பும் மற்றும் மின் மோட்டரும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஏ பட்டிகை மொத்த சொத்தில் கேபி ரோட்டை தொட்டு உள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பி பட்டிகையில்7.558 செண்ட் மனையும் மற்றும் கட்டிடங்களும் மின் இணைப்பும் மற்றும் குடிநீர் இணைப்பும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பட்டிகை விவரத்தில் வா.சா.ஆ.6 ஏ பட்டிகை சொத்து விவரத்தை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் மொத்த ரத்து ஆவணமும் செல்லாது என கோரியுள்ளோம்.

11) பிராதில் பட்டிகை சொத்து விவரம் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவண சொத்து விவரத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் இல்லாத ஐந்து வரிகளை பிராதில் சேர்க்க விவரம் நாங்கள்தான் சொன்னோம். வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் இடம் பெறாமல் பிராது சொத்து விவரம் பத்தி 1ல் கடைசி ஐந்து வரிகள் வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் பத்திர ஏ பட்டிகை சொத்து விவரத்தில் உள்ள விவரங்கள் என்றால் அப்படி இல்லை. அதனால் பிராது பட்டிகையில் வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவண ஏ பட்டிகை சொத்து விவரத்தை மட்டும் சொல்லியுள்ளேன் என்றாலும்

வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட ஆவண பி பட்டிகை சொத்தை சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. பிராது பட்டிகை விவரம் தவறானது என்றாலும் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு விரோதமாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

12) பிராது சொத்து விவரத்தில் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் இடம் பெறாத பிராது சொத்து விவரம் பத்தி 1ல் கடைசி ஐந்து வரிகள் குறிப்பிடப்பட்டுள்ளதால் வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் தவறானது என சொல்கிறீர்களா என்றால் பிராதில் கட்டிட எண்கள் சொல்லப்பட்டுள்ளது இரண்டுமே சரிதான். பிராது சொத்து விவரத்திலும் வா.சா.ஆ.4 சொத்து விவரத்திலும் கிழக்கு பக்கம் ரீசர்வே எண் P-24-144 ம் நம்பர் என் கைவசம் உள்ள முடுக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிழக்கு பக்கம் உள்ள முடுக்கை என் பாட்டி எங்கள் கைவசம் தரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஏ மற்றும் பி பட்டிகை சொத்துக்களுக்கு கிழக்கு அந்த பிராது சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள கிழக்கு பக்கம் உள்ள முடுக்கு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தில் ரீசர்வே எண் P-24-144 சேர்த்து கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான்.

13) ரீசர்வே எண் P-24-144 சொத்து ஒரு பாதை, முடுக்கு என்றால் சரியல்ல. ரீசர்வே எண். P-25-144 சொத்தின் வீதி மூன்று அடி இருக்கும் நீளம் 20 அடி இருக்கும். அந்த இடம் ஒரு பாதை அல்லது முடுக்கு போன்ற அமைப்பில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த பாதை வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவண சொத்து விவரத்தில் ஏ பட்டிகை சொத்தின் தென்கிழக்கு மூலையில் ஆரம்பித்து வடகிழக்கு மூலையில் முடிகிறது என்றால் கிழக்கில் இருந்து மேற்காக செல்கிறது. என் தாத்தாவிற்கு வடிவீஸ்வரம் கிராமம் P-138 மற்றும் P-139 புலங்களில் சொத்து உள்ளது என்றால் தெரியவில்லை. எனக்கு கே.எஸ் காம்ப்ளக்ஸ் தெரியும். கே.எஸ் காம்ப்ளக்ஸில் உரிமையை விட்டுத்தர கேட்டு நானும் என் தாயாரும் என் பாட்டியிடம் பல முறை தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு என் பாட்டி தராததால் நானும் என் தாயாரும் என் பாட்டியை அடித்து கீழே தள்ளினோம் என்றால் அது போல் எதுவும் நடக்கவில்லை.

14) அந்த சமயத்தில் 3 ம் பிரதிவாதி என் பாட்டியை காப்பாற்றினார் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை. என் பாட்டி காவல்துறையினரிடம் நேரடியாக சென்று அது குறித்து புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். என் பாட்டி நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் முன்பு பெற்றோர் பராமரிப்பு மனு கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எங்களுக்கு எதிராக எங்கள் பாட்டி சொல்லிவிடக்கூடாது என்று அவரை அடித்து நாங்கள் காயப்படுத்தினோம் என்றால் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை. அதனால் என் பாட்டிக்கு இடுப்பு விலா எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானும் என் தாயாரும் கோட்டாட்சியர் விசாரணைக்கு சென்றோம். என் பாட்டி அவருக்கு காயம் ஏற்பட்டதால் விசாரணைக்கு ஆஜராக முடியாது என்று மருத்துவச்சான்றிதழ் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அதன்பின் அசல் வழக்கு எண்.163/2017 நாகர்கோவில் முன்சிப் கோர்ட்டில் தாக்கல் செய்தோம் என்றால் ஆம். என் பாட்டிக்கு நாங்கள் மருத்துவ உதவி செய்யவில்லை என்றாலும் அவருக்கு பண உதவி கிடைக்கக்கூடாது என நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

15) நானும் என் தாயாரும் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித பொருள் உதவியும் அனுசரனையும் செய்யவில்லை என்றால் என் பாட்டிக்கு பணம் போய்கொண்டிருந்தது ஆகையால் அதற்கு அவசியம் இல்லை. நான் இந்த வழக்கை செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் மற்றொரு செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் பொது அதிகார ஆவணம் ஆகியவற்றை ரத்து செய்யக்கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கை தாக்கல் செய்தபோது வழக்குச்சொத்து எங்கள் கைவசம் வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் தபசு சொத்து ஒன்றாம் பிரதிவாதியின் கைவசம் அவர் இறக்கும் காலம் வரை அவர் கைவசம் இருக்க வேண்டும் என்றும் அந்த சரத்து படி நாங்கள் நடந்து வருவதாக பிராது பட்டியல் 7 ல் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் சொத்து கைவசம் என் பாட்டி கைவசம் இருந்தது. பிராது நான்காவது பரிகாரமாக எங்கள் ஸ்வாதீனத்தை தொந்தரவு செய்யக்கூடாது என கோரியுள்ளது பொய் என்றால் வா.சா.ஆ.4 ஆவணத்தில் அனுபவம் என சொல்லியுள்ளது என் பாட்டி வாடகையை வாங்கும் உரிமையை குறிப்பதாகும்.

16) வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான் சொன்னதுபோல் அனுபவமானது வாடகை வாங்க உரிமை உண்டு என்பது மட்டும் எனக்குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி பரிகாரமானது வா.சா.ஆ.4 சரத்துக்கு முறனாக கேட்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராதில் வா.சா.ஆ.4 ஆவணம் எழுதித்தந்த அன்று வழக்குச்சொத்து அனுபவத்தை எனக்கு விட்டுக்கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் கைவசம் அனுபவம் இல்லாத சொத்தை இருப்பதாக கற்பனையின் பெயரில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் வழக்குச்சொத்து எனக்கும் என் தாயாருக்கும் அவகாசப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்தில் திருமண மண்டபம் அமைந்துள்ளது அதன்பின்னால் வணிக வளாகம் உள்ளது. திருமண மண்டபத்தில் ஆண்டிற்கு 10 நிகழ்ச்சிகள் நடைபெறும். அந்த நிகழ்ச்சிகளுக்கான ரசீது மேலாளர் வழங்குவார். மேலாளர் பெயர் கோபால் ஆகும்.

17) வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தை பத்திர எழுத்தரிடம் எழுத சொன்னது யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய விவரத்தை என்னிடமும் என் தாயாரிடமும் யார் தெரிவித்தார்கள் என்று தெரியவில்லை பிற்பாடு என் தாயாரிடமும் சொல்லியிருப்பார்கள் எப்போது சொல்லியிருப்பார்கள் என்று தெரியாது. எனக்கு வா.சா.ஆ.4 ஆவணம் எழுதிய விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எங்கள் கைவசம் எப்போது எப்படி கிடைத்தது என தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தை நீதிமன்றத்தில் எப்படி தாக்கல் செய்தேன் என்றால் என் தாயாரிடம் அந்த ஆவணம் இருந்தது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 1,2 தாள்களை தவிர 3 முதல் 7 பக்கங்கள் காப்பி என்றால் எனக்கு தெரியவில்லை.

18) வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு வேறு பிரதி எதுவும் எங்கள் வசம் உண்டா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.4 முழுமை பெற்ற ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் பத்திரம் அசல் ஆவணமா அல்லது கூடுதல் பிரதி ஆவணமா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.10 ஆவணத்தில் வாதிகளின் பெயர் மற்றும் முதல் பெயர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 வில்லங்கச்சான்றிதழ் பெற யார் மனு செய்தார்கள் என்று தெரியவில்லை. அதனை நான் மனு செய்து

பெறவில்லை தாத்தா வாங்கியிருப்பார். வா.சா.ஆ.8 கரத்தீர்வை எவ்வாறு கிடைத்தது என்றால் வீட்டில் இருந்ததை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.8 சொத்து விசித்தீரணத்தில் வீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5,6 ஆவணங்களுக்கு முன்பு எங்கள்வசம் கரத்தீர்வை ரசீதுகள் எதுவும் இல்லை என்றால் தெரியவில்லை பார்க்க வேண்டும். வா.சா.ஆ.8 ஆவணமானது வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு பிந்தையது என்றால் சரிதான்.

19) வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தை அனுசரித்து வா.சா.ஆ.8 கரத்தீர்வை ரசீது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.4 நடப்பிற்கு வரவில்லை என்றாலும் வா.சா.ஆ.6 தான் நடப்பிற்கு வந்தது என்றாலும் எனக்கு வா.சா.ஆ.6 பி பட்டிகை சொத்து மட்டும்தான் கிடைத்தது என்றாலும் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.6 பட்டிகை விவரத்தை பிராதில் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் தெரியவில்லை. வழக்கில் உள்ள பட்டிகை விவரம் தவறு என்றாலும் வழக்கு பரிகாரம் கேட்க எனக்கு உரிமை கிடையாது என்றாலும் வா.சா.ஆ.6 பி பட்டிகை சொத்து மட்டும் எங்கள் கைவசம் உள்ளது என்றாலும் அதனை பிரதிவாதிகள் தொந்தரவு செய்யவில்லை என்றாலும் வா.சா.ஆ.6 ஏ பட்டிகை சொத்து 2 ம் பிரதிவாதி கைவசம் உள்ளது என்றாலும் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் பிரதிவாதிகளின் எதிர் கோரிக்கை அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. 2014 க்கு பின் மொத்த சொத்தும் எங்கள் கைவசம் உள்ளதாக காண்பிக்க வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.10 தவிர வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

20) வா.சா.ஆ.4 சரத்தில் கண்டபடி அன்பினாலும், பாசத்தினாலும் நாங்கள் செயல்படாமல் இருந்ததால் என் பாட்டியை கஷ்டப்படுத்தியதால் அவர் வா.சா.ஆ.4 யை ரத்து செய்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அதனை ரத்து செய்தது சரியானது என்றாலும் வா.சா.ஆ.6 நடைமுறையில் உள்ளது என்றாலும் நான் வா.சா.ஆ.6 யை சம்மதித்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை. ஐந்தாம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.)